**DEPOSITION OF WITNESS**

IN THE COURT OF : Judicial Magistrate, Thuraiyur.
Case No. : CC. 160 of 2022
Prosecution Witness : PW6

19.08.2025

| | | | |
|---|---|---|---|
| Name | : பிரபாகரன் | Calling | : விவசாயம் மற்றும் டிரைவர் |
| spouse Name | : செல்வராஜ் | Religion | : |
| Village | : ஜம்புமடை | Age | : 48 |
| Taluk | : முசிறி | | |

**சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.**

2 வது எதிரி ஆஜர். 1 மற்றும் 3 எதிரிகள் ஆஜரில்லை. வழக்கறிஞர் ஆஜர். மனு தாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் தற்போது ஜம்புமடைடியில் குடியிருந்து டிரைவராக வேலை செய்து வருகிறேன். அ.சா.1 அம்மா, அ.சா.2 எனது அப்பா. ஆஜர் எதிரி எனது தம்பி மனைவி. 1 வது எதிரி எனது தம்பி. 3 வது எதிரி எனது தம்பி மாமியார். எனது அப்பா விவசாய நிலங்கள் 4 1/2 ஏக்கர் வாங்கியிருந்தார். அதில் எனக்கும், எனது தம்பிக்கும் சரி பகுதியாக பிரித்துக்கொடுத்துவிட்டார்கள். அதில் ஒரு ஏக்கர் நிலத்தை எனது அப்பா, அம்மாவுக்கு ஜீவணமாக வைத்துக்கொண்டார்கள். அதில் பொதுவாக குட்டை தேக்கி பாசனம் செய்து வந்தோம். வண்டி பாதை வடபுறமாக என்னுடைய நிலம் உள்ளது. வண்டி பாதைக்கு தென்புறமாக எனது தம்பிக்கு இடம் ஒதுக்கப்பட்டது. சுமார் 2,3 வருடங்களுக்கு முன்பு எனது அப்பா, விவசாய நிலங்களில் மயில்கள் உள்ளே வராமல் இருக்க கயிறு கட்டி வைத்திருந்தார். சாயங்காலம் எனது தம்பி, தம்பி பிள்ளைகளை பார்த்து கயிறை அறுத்துவிடாமல் பார்த்து வாங்க என்று எனது அப்பா, அம்மா சொன்னார்கள். அதற்கு அப்படித்தான் வருவேன் என்று எனது தம்பி சொன்னார். நான் கயிறை அறுந்துவிட்டலாம் பரவாயில்லை கட்டிக்கொள்ளலாம் பிரச்சனை செய்து கொள்ளவேண்டாம் என்று சொல்லிவிட்டு நான் வண்டிக்கு சென்றுவிட்டேன்.

எனது தம்பி எனது அம்மாவை அடித்துவிட்டதாக எனது மனைவி மற்றும் குழந்தைகள் என்னிடம் சொன்னார்கள். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**சாட்சி அரசு தரப்பை ஆதரிக்காததால் சாட்சியை பிறழ்சாட்சியாக அறிவிக்ககோரி அரசு தரப்பில் அனுமதி கோரப்பட்டு அனுமதி அளிக்கப்பட்டது.**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

போலிசார் என்னை விசாரித்தார்கள் என்றும், விசாரணையின் போது 07.04.2022 ம் தேதி இரவு 09.30 மணியளவில் எனது தம்பி, எனது அப்பாவின் வீட்டிற்கு எனது அம்மாவை பார்த்து, ஆபாச வார்த்தைகளால் திட்டி, சொத்தை பிரிச்சி கொடுக்கமுடியல என்று கூறினார் என்றும், போலிசார் விசாணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. அதை பார்த்த அம்மாவும், அப்பாவும் ஏன் இப்படி இரவில் தகராறு செய்கிறாய் என்று கேட்டதற்கு அப்படித்தான் செய்வேன் என்று கூறி ஆபாச வார்த்தைகளால் திட்டி எனது அம்மாவின் வலது முன் கையை எனது தம்பி முறுக்கினார் என்று போலிசார் விசாணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. அதை தடுக்கச்சென்ற எனது அப்பாவை எனது தம்பி எட்டி உதைத்து கீழே தள்ளினார் என்றும், பின்பு 1 முதல் 3 எதிரிகள் நீ மரியாதையா இங்கிருந்து ஓடிவிடுங்கள் இல்லை என்றால் உங்களை கொல்லாமல் விடமாட்டோம் என்று மிரட்டினார்கள் என்று போலிசார் விசாணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. தற்போது எதிரிகள் தம்பி, தம்பி மனைவி, தம்பி மாமியார் என்பதால் உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை** – இல்லை

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

ஒப்பம்/–அ.நர்மதாராணி,
நீதித்துறை நடுவர், துறையூர்